1968 மார்ச் 27]

மூடி விட்டால், அதிலே வேலை செய்யக்கூடியவர்கள் வேலை வாய்ப்பை இழந்துவிடுவார்கள். பிறகு அவர்களுக்கு வேறு வேலை தருவார்களா என்று கேட்கவேண்டிவரும்.

திரு. வி. டி. அண்ணுமலை : மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விவசாயப் பொருள்களுக்கு செஸ் வசூலிப்பதாகச் சொன்னுர்கள். வேர்க்கடலைதான் விவசாயப் பொருள், வேர்க்கடலையிலிருந்து உற்பத்தியாகிற நிலக்கடலை பயிர் வியாபாரப் பொருள் இல்லை, அதுவும் உற்பத்தி செய்கிற பொருள் என்ற முறையிலே அதற்கு செஸ் வசூலிப்பதுபோல, கரும்பி லிருந்து உற்பத்தியாகிற வெல்லத்திற்கு செஸ் விதிக்கப்பட்டு அதிகமாக வசூல் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா? மு.ப. பகல் 100

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதுபற்றியும் இப்பொழுது அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, I rise on a point of order. During question-hour, hon. Members try to catch the eye of the Chair if they want to put a question. Of course, we try our best and sometimes we try to catch your eye but is elusive. This is the practice followed in every Parliament and in every Legislature. Is it in order for any hon. Member to run to the seat of the Chair and almost scratch him and also say ' Please call me ' and then run back to his seat and later on for the Chair to give him an opportunity to put a question. If that is in order, then everybody would be running to your seat and making your attention fall upon them. Is that in order?

THE HON. THIRU C. N. ANNADURAI : I would like to know how the inference is drawn by the hon. Member that the other hon. Member rushed to the Speaker's seat only for this purpose. He might have gone there for some other purpose.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் சபாநாயகருடைய கவனத்தை ஈர்ப்பதற்காக அவருடைய இடத்திற்கு வருவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களுக்கான அரசினர் இல்லங்கள்

* 342 வினு.—**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு தாழ்த்த பட்டோர் நல செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

அரசினர் மாணவர்களுக்கான ஹாஸ்டல்களில், அரிசன மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டவைகளுள் காலியாக உள்ள இடங் களில் பின்னிலை வகுப்பு (Backward) மாணவர்களைச் சேர்க்கச் செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

* 343 வினு.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்** : மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—